24th March 1965]

முடியாது. மற்ற பொது மக்களுக்காகக் கட்டும் திட்டம் இது. ஸப்ஸிடைஸ்டு இன்டஸ்ட்ரியல் ஹவுஸிங் ஸ்கீமின்கீழ் கட்டப்படும் வீடுகள் தொழிலாளர்களுக்காகக் கட்டப்படுகின்றன.

திரு. ம. கமலநாதன் : வீட்டு வசதிக் கழகம் கோவையில் இரண்டு இடங்களில் நில ஆர்ஜிதம் செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. கோவை டவுன்ஷிப்புக்கு முதல் நிலையில் 250 எக்கர் போக, இரண்டாவது நிலையிலும் 250 எக்கர் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முதலில் 250 எக்கர் நிலம் எடுத்துக்கொண்டுவிட்டோம். இரண்டாவது 250 எக்கருக்கு இப்பொழுது 4 (1) நோட்டிபிகேஷன் போட்டிருக்கிறோம். அப்பொழுதுதான் புது டவுன்ஷிப் ஏற்படமுடியும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : அரசாங்கத்தின் நடவடிக்கை மூலம் நல்ல சலுகைகளை எல்லோருக்கும் கொடுக்கவேண்டும் என்பதுதான் நோக்கம் என்று நான் நினைக்கிறேன். அப்படியானால், ஏன் இந்தத் திட்டத்தை வீடு நெருக்கடியுள்ள உதகை நகரத்திற்கும் விஸ்தரிக்கக்கூடாது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : " டூரிஸ்ட் ஹோம் " போன்று கட்டுவதுதான் உதகைக்குப் பொருத்தமாக இருக்கும். சர்க்கார் அங்கே டூரிஸ்ட் ஹோம் கட்டியிருக்கிறார்கள்.

வீடுகட்டும் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி வேறு இனத்திற்கு மாற்றம்

* 316 கேள்வி—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் வீடு கட்டும் இனத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை வேறு இனங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், மாற்றக் காரணம் என்ன ? எவ்வளவு தொகை ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) வீட்டு வசதி திட்டத்தின்கீழ் உள்ள செலவு குறையலாம். ஆனால் குறிப்பிட்ட எந்தத் தலைப்பிற்கும் நிதி ஒதுக்கம் மாற்றப்படவில்லை.

(இ) இத் திட்டத்தின்கீழ், தோராயமாய் 191 லட்சத்திற்குச் செலவு குறையலாம். தேசப் பாதுகாப்பு, சிவில் பாதுகாப்பு சம்பந்தமாக சில இன்றியமையாத திட்டங்களில் கூடுதல் செலவு செய்ய வேண்டியிருந்ததாலும், வேளாண்மை, மின்சாரம், பாசனம் முதலிய திட்ட வேலைகள் நிறைவேறும் வேகத்தை அதிகப்படுத்தவேண்டியிருந்ததாலும், வீட்டு வசதித் திட்ட வேலைகள் நிறைவேறும் வேகத்தைக் குறைக்கவேண்டியிருந்தது.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த ஹவுஸிங் போர்டு தனி போர்டாக இயங்கினாலும், நம்முடைய சர்க்காருடைய ஆதிக்கத்தின்கீழ் அதனுடைய நடைமுறைகள் இருக்கும் காரணத்தால், அந்த போர்டின் வரவு செலவுக் கணக்குகளை அக்கவுண்டன்ட்-ஜெனரலின் தணிக்கைக்குக் கொண்டு வருவதற்கான கருத்தை இந்தச் சர்க்கார் பரிசீலனை செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த சிபார்சு ஏற்கெனவே செய்யப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி சர்க்கார் முடிவு எடுக்கவில்லை.

திரு. ம. கமலநாதன் : இந்த வில்லேஜ் ஹவுஸிங் ஸ்கீம் கிராமங்களிலே சரிவர நடைபெறுதற்குக் காரணம் டைட்டில் கிடைக்காதது என்று சொல்லப்படுகிறது. அந்தக் கட்டுப்பாடு தளர்த்தப்படுமா ? சென்ட்ரலி-ஸ்பான்ஸர்டு ஸ்கீம்கள் தேசிய நெருக்கடியின் காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன என்பது உண்மையா ? இதற்கு எல்.ஐ.சி. உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். 9–00 a.m.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த விவரங்கள், கணக்குகள் எல்லாம் புத்தகத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. மூன்ருவது ஐந் தாண்டுத் திட்டத்தில் வில்லேஜ் ஹவுஸிங் புராஜெக்ட்டுக்காக அதிகமாகக் கொடுத்திருக்கிருேம் என்பது தெரியும். சில திட்டங்கள் குறைக்கப்பட்டன. அதற்கான காரணங்களும் விளக்கப்பட்டிருக்கின்றன. வில்லேஜ் ஹவுஸிங் புராஜெக்ட் இன்னும் துரிதமாக நடைபெறுவதற்குத் தடைகள் இருக் கின்றன என்பது உண்மைதான். இருந்தாலும் அந்தத் தடைகளின் காரணமாக ஒதுக்கிய தொகையை செலவழிக்காமல் இருக்கவில்லை.

திரு. வை. சங்கரன் : ஒரு சில தொழிலாளர், நெசவாளர், கூட்டுறவுச் சங்கங்களில் வீடுகள் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, இடமெல்லாம் பார்த்து, இடங்களை வாங்கிவிட்ட பிறகு, இப்பொழுது அவைகளை விற்று விடவேண்டுமென்று அரசாங்கம் வற்புறுத்துவது நியாயம் அல்லவே. ஆகவே, ஏற்கனவே இந்தத் திட்டத்தில் சேர்ந்து இடங்களை வாங்கிய வர்களுக்கு, ஓரளவு வேலைகளைச் செய்தவர்களுக்கு உதவிசெய்ய அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நிதி வசதிக் குறைவின் காரணமாக, அந்தத் திட்டத்தை அமுல் நடத்த முடியவில்லை.

திரு. செ. மாதவன் : இந்த வீடுகள் கட்டும் திட்டத்திற்கு ஒதுக்கப் பட்ட தொகையை நம்முடைய மாநில சர்க்கார் சரியாகச் செலவழிக்க வில்லை, அதில் தவறு இருக்கிறது என்று மத்திய சர்க்காரிடமிருந்து ஏதேனும் குறிப்பு வந்ததா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுமாதிரிக் குறிப்பு ஒன்றும் வரவில்லை. மத்திய சர்க்காரிலே உள்ள ஒவ்வொரு மந்திரியும், அந்தந்த ராஜ்ய சர்க்காருக்கு ஒதுக்கப்படுகின்ற தொகை பூராவையும் தங்கள் இலாகாவோடு சம்பந்தப்பட்ட திட்டங்களுக்கே செலவழிக்க வேண்டுமென்று நினைக்கிருர் கள். மொத்தம் நமக்குக் கிடைக்கவேண்டிய தொகை 291 கோடி. அதற்குள் எந்தத் திட்டத்திற்கு தவிர்க்கமுடியாத அவசியம் இருக்கிறதோ அந்தத் திட்டத்திற்கு பிரையாரிடி கொடுத்து வருகிருேம். அந்தவிதமாகப் பார்க்கிறபொழுது, மின்சாரத்திற்கும், நீர்ப்பாசனத்திற்கும், உணவு உற்பத்திக்கும் அதிகமாக பிரையாரிடி கொடுக்கவேண்டியிருப்ப தால் நமக்கு ஒதுக்கிய தொகையை ரீ-அட்ஜெஸ்மென்ட் செய்துகொண்டோம்.

திரு. செ. மாதவன் : அப்படி ரீ-அட்ஜெஸ்மென்ட் செய்வதால் மீண்டும் இந்தத் திட்டத்திற்காகக் கொடுக்கப்படுகின்ற தொகை குறைக்கப் படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மத்திய சர்க்கார் கொடுக்க முடியாத நிலையில்தான் இருக்கிருர்கள். ஏற்கனவே நம்முடைய பிளான் பெர்ஃபார்மன்ஸ் 340 கோடி. நமக்கு ஒதுக்கியது 290 கோடி. ஆகையால் மத்திய சர்க்காரிடமிருந்து நிதி வசதி பூராவையும் பெற முடியும். ஆனல் நாம் செலவழிக்கின்ற அளவுக்கு அவர்களால் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : கிராமங்களிலே வீடுகட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் 1964-ம் வருடம் டிசம்பர் மாதம் 31-ந் தேதி முடிய 46 வீடுகள்தான் கட்டி முடிக்கப்பெற்றிருக்கின்றன என்று இந்த அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த கிராமங்களிலே வீடு கட்டுவதற்கு அந்த டைப் டிசைனை மாற்றிக்கொடுத்தால் அதிகமாக வீடு கட்டுவதற்கு கிராம மக்கள் முன் வருவார்கள். ஆகவே, அந்த அளவுக்கு ஏற்பாடுகள் செய்ய சர்க்கார் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் உறுப்பினர் அவர்கள் " தேர்டு ஃபைவ் இயர் பிளான் " என்ற புத்தகத்தில் 184-வது பக்கத்தைப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கையிலே வைத்திருக்கின்ற அறிக்கையில் ஒரு வருஷக் கணக்குத்தான் இருக்கிறது. நாம் போட்

24th March 1965]

டிருக்கிற பிளான் ஐந்து வருஷங்களுக்கு. ஆகவே, ஐந்து வருஷக் கணக்குகளைப் பார்த்தால்தான் தெரியும். ஐந்து வருஷங்களில் வில்லேஜ் ஹவுஸிங் ப்ராஜெக்ட்டுக்கு ஒதுக்கிய தொகை ரூ. 25 லட்சம். இப்பொழுது 1965–66 பட்ஜெட்டிலே ஒதுக்கியுள்ள தொகை ரூ. 38,60,000. அதே போல் நாம் எவ்வளவு வீடுகள் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கிறோம் என்றும் கணக்கு இருக்கிறது.

Number of houses programmed	..	**1,350**
Number of houses constructed up to 1963–64.		**1,612**

ஆகையினால் நாம் திட்டத்திற்கு மேல்தான் செய்து இருக்கிறோம்.

Mr. SPEAKER : questions are over.

[*Note.*—An asterisk(*) at the commencement of a speech indicates revision by the Member.]

II—ANNOUNCEMENT.

NOMINATION TO THE COMMITTEE ON SUBORDINATE LEGISLATION.

Mr. SPEAKER : Under rule 201 (1) of the Madras Legislative Assembly Rules, I hereby nominate the following Members of the Assembly to be members of the Committee on Subordinate Legislation for the year 1965–66 :—

1. Sri K. Parthasarathy.
2. Sri G. Rajaram.
3. Sri V. Sankaran.
4. Sri N. Shanmugasundaram.
5. Sri C. Srinivasan.
6. Sri C. Chiranjeevulu Naidu.
7. Srimathi A. Suares.
8. Sri M. V. Karivengadam.
9. Sri S. Madhavan.
10. Sri P. K. Mookiah Thevar.

Under rule 202 of the said rules, I nominate Sri K. Parthasarathy, Deputy Speaker, to be the Chairman of the Committee.

III.—GOVERNMENT MOTION.

ASSOCIATION OF COUNCIL MEMBERS WITH THE COMMITTEE ON SUBORDINATE LEGISLATION.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Sir, I move—

" That this House recommends to the Legislative Council that they do nominate three Members from the Council to associate with the Committee on Subordinate Legislation of this House for the financial year 1965–66 and communicate to this House the names of the Members so nominated."

The motion was put and carried.